சாதி ஒழிப்பே !

சமூக விடுதலை !!





# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு

# AATHITHAMIZHAR PERAVAI

TAMIL NADU

நாள் :

***அருந்ததியர் விடுதலைக்காக இழிவு ஒழிக்க ஆதித்தமிழர் பேரவை உறுதியாக போராடும்.***

*கடந்த கால் நூற்றாண்டு காலமாக போராடி பல்வேறு படிநிலைகளை தாண்டி அருந்ததியர் உள் இடஒதுக்கீடு கடந்த கல்வியாண்டான* ***2009–2010****ல் நடைமுறைப்படுத்தப்பட்டது.*

*சட்டப்படியான எந்த வழிமுறைகளாலும், எந்த நீதிமன்றம் போனாலும் அரசியல் சாசனத்தின்* ***341****வது பிரிவால் பாதுகாக்கப்பட்டுள்ள அருந்ததியர் உள் இட ஒதுக்கீட்டை தோற்கடிக்கப் படமுடியாது என்பதை தெரிந்திருந்தும் அரசியல் விளம்பரத்துக்காக அருந்ததியர் விரோதப் போக்குடன் வழக்குகள் தொடரப்படுமேயானால், அந்த வழக்குகள் அனைத்திலும் ஆதித்தமிழர் பேரவை இணைத்துக்கொள்ளும்.*

*சமூக நீதிக்கான போராட்டத்தைப் போலவே, இழிவு ஒழிப்புப் போராட்டத்திலும் பேரவை இறங்கியுள்ளது. எதிர்வரும் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல்* ***14****ல் தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணில் "செருப்பு தைப்போர் மறுவாழ்வு மாநாட்டை" நடத்தவுள்ளது. சாலையோரங்களில் பழைய செருப்பு தைப்போரின் அனைத்து விதப் பிரச்னைகளும் மிக விரிவாக ஆராயப்பட்டு, வாழ்வுரிமைக்கான போராட்டங்கள் விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.*

*அதுபோலவே, தந்தை பெரியார் பிறந்த நாளான எதிர்வரும் செப்டம்பர்* ***17****ல் சென்னையில், ஒ டுக்கப்பட்ட மக்கள் தங்களின் இழிவை ஒழிக்க அரசாங்கத்திடம் எந்த கோரிக்கையும் வைக்காமல், இழிவு சுமத்தும் எந்த அடிமை வேலையிலும் ஈடுபடமாட்டோம் என தாங்களாகவே*

தலைமையகம் : **அ-7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை - 641 041.**

பேசி : 0422 - 2424721, 94430 - 84642 மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com

www.aathithamizharperavai.com

சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!




# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு

# AATHITHAMIZHAR PERAVAI

**TAMIL NADU**

நாள் :

*அறிவித்துக்கொள்கிற "இழிவு ஒழிப்பு பிரகடன மாநாட்டையும்" பேரவை நடத்தவுள்ளது.*

*சமூக நீதி, வாழ்வுரிமை, இழிவு ஒழிப்பு என நீண்ட நெடிய போர்ப்பயணத்தில் ஈடுபடுத்திக்கொண்டுள்ள ஆதித்தமிழர் பேரவைக்கு அனைத்து சமூக நீதி, சனநாயக, முற்போக்கு சக்திகளும் குறிப்பாக சனநாயகத்தின் நான்காவது தூணான பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்களும் ஆதித்தமிழர் பேரவைக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென பேரவை தோழமையுடன் கேட்டுக்கொள்கிறது.*

*என்றும் அருந்ததியர் விடுதலைப் பணியில்,*

*(இரா.அதியமான்)*

தலைமையகம் : **அ-7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை - 641 041.**

பேசி : **0422 - 2424721, 94430 - 84642** மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
www.aathithamizharperavai.com